கவிதை

பொற்காலம் மலரும் பாருங்கோ

எங்களுக்கும் காலம் வரும் இருந்துபாருங்கோ
ஏழைமக்கள் வாழ வேண்டும் தெரிந்துகொள்ளுங்கோ
திங்களுக்கும் ஓய்வு ஒருநாள் உண்டு பாருங்கோ
தேசமெலாம் திரும்பிப்பாக்கும் திருநாள் வருமுங்கோ

உங்களுக்கும் வாழ்வு வேண்டும் உணர்ந்து கொள்ளுங்கோ
ஒற்றுமையாய் வாழவேண்டும் ஒன்று கூடுங்கோ
சண்டைசள்ளு எல்லாத்தையும் தள்ளி வையுங்கோ
சாவதற்கா நாம் பிறந்தோம் புரிந்துகொள்ளுங்கோ

கண்டதையும் நினைச்சு நினைச்சு கவலைப்படாதீங்கோ
கரங்களெல்லாம் ஒன்று பட்டால் வெற்றி தானுங்கோ
சாதிசமய வேறுபாட்டை ஒதுக்கித்தள்ளுங்கோ
தமிழர் என்ற பேரிருந்தால் போதும் உணருங்கோ

வளரும் குழந்தை தமிழ்படிக்க வாய்க்கால் கட்டுங்கோ
வருங்காலம் அவர்களுக்கும் வாழ்வுகாட்டுங்கோ
இளையவர்கள் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்று
இவர்களுக்கும் பொறுப்புகளைக் குடுத்துப்பாருங்கோ

பழையதெல்லாம் புதுமைபேணும் காலம் பாருங்கோ
பகுத்தறிவும் கடமைகளும் வளரும் பாருங்கோ
ஆழம் அறியாமல் காலைவிடாதீங்கோ
அடுத்தவர்கள் குடும்பத்துக்கு கெடுதல் தராதீங்கோ

நாகரீகம் உயர்வைக்காட்டி நம் குழந்தைகளை
நம்மினத்தின் வாழ்வுக்குள்ளே வாழவிடுங்கோ
மேலைநாட்டு வாழ்விலெங்கள் இனமழிந்துவிட
மேலும் மேலும் தவறுகளை வளத்திடாதீங்கோ

நாமழுதால் நம்மினம்தான் நமக்குதவுமுங்கோ
நாம் வாழ நமதூர்தான் நமக்குவேணுமுங்கோ
இளமையோடு மொழியுணர்வை ஊட்டிவளருங்கோ
இனியதொரு பொற்காலம் மலரும்பாருங்கோ

- முரசன்

பால் கடன்

என் மார்பின்
பால் வாசனையில்
கண்வளர்ந்தவளே!
இன்று நீ அகதியாய்
அன்னிய தேசத்தில்.
தொப்பிள் கொடி
இன்னமும் பச்சையாய்.

உன்னை நினைக்கும்
போதெல்லாம் - என்
கருப்பைச் சுவர் கூட
விம்மி எழுகிறது.

வயசு தான் போட்டுது
ஆனால் இன்னமும்
கருப்பைச்சுவர் உன்
இஸ்பரிசத்தை மறக்கவில்லை.

உன் உணர்வைச்
சுமந்து வரும் கடிதம் பார்க்க
கண் இசைவதில்லை.

உன் புகைப்படத்தை
பள்ளிக்கப்போகும் போது
உன்னை அழைத்துச்சென்ற
விரல்கள் தான் தடவிப்பார்த்து
மகிழ்ந்து கொள்கிறது.

படலைக்குள் அரவம் கேட்டால்
நீ வந்து நிற்பதாய்
ஓர் பிரமை.

பிறகென்ன கேக்கவே வேணும்.
கண்ணின் வில்லை கூட
உன் வரவுக்காய்
ஒருமுறை சுருங்கி விரியும்.

அன்று முழுவதும்
சொட்டுத் தண்ணி கூட
நாவிறங்கா.

ஊரில் எல்லோரும்
மகளின் வெளிநாட்டுக்காசில்
கிழடுக்கு உல்லாச வாழ்வு
என்று
போற்றுவதாய் உமிழ்ந்து
மெல்வர்.

முகம்மலர கேட்டுவிட்டு
உன் நினைவால் மனம்
பித்துப்பிடித்ததை யார் அறிவர்?

சாவோ
என் வாசலில்
தலைவிரித்து நிர்க்கிறது.
உன் ஸ்பரிசம்பட்டால் தான்
இந்த அம்மா உயிர்போகுமம்மா.
ஓடோடி வந்து என்
பால்கடனைத்தீர்த்துவிடு.

- நளாயினி

நீ வருமா

புல்லுத் தரையில் விளையாடிப்
புண்ணாய்ப் போன கால்களுக்குப்
புளுதி தனையே மருந்தாக்கிப்
புரண்ட மகிழ்ச்சி மீள்வருமா

காலை உணவும் இல்லாமல்
காலிற் செருப்பும் இல்லாமல்
காச்சும் வெயிலில் விளையாடிக்
களித்த நாட்கள் மீள்வருமா

தோட்டம் துரவில் அலைந்தலைந்து
தொட்டாற் சுருங்கி மரம்தேடி
தொட்டுத் தொட்டு இலைசுருட்டி
தொலைத்த நாட்கள் மீள்வருமா

முறமது குடையாய் மாறிவிட
முற்றம் நிறைந்த மழைநீரில்
காகிதக் கப்பல் விட்டேநாம்
களித்த நாட்கள் மீள்வருமா

வீட்டுப் பாடம் செய்யாமல்
விளையாடிப் பின் காலையிலே
வியாதி எனவே பலசொல்லி
வீட்டில் நின்ற நாள்வருமா

காதல் என்ற சொல்லுக்குக்
கருத்தே தெரியா வயதினிலே
கடிதம் கொடுத்துப் பதிலுக்காய்
காத்த நாட்கள் மீள்வருமா

கண்ணைக் கவரும் கவர்ச்சியுடன்
கலகல வென்று சிரிக்கின்ற
கன்னிப் பெண்கள் பின்னாலே
காவல் சென்ற நாள்வருமா

கள்ள மில்லா மனங்கொண்ட
கனிவும் பண்பும் மிகக்கொண்ட
நண்ப ரோடு சேர்ந்திருந்த
நல்ல நாட்கள் மீள்வருமா

வெய்யில் மிகுந்த நேரத்தில்
வேப்ப மரத்து நிழல்தன்னில்
சாய்வுக் கதிரை துணையுடனே
சாய்ந்த நாட்கள் மீள்வருமா

தொல்லை இல்லா நண்பருடன்
தொடராய் ஓடும் வண்டியிலே
தொங்கிக் கொண்டே பயணித்துத்
தொலைத்த நாட்கள் மீள்வருமா

அறியாமல் நான் செய்துவிட்ட
அத்தனை தவறும் களைந்தகற்றி
அழகாய் மீள வாழ்க்கையினை
அமைத்து வாழும் நாள்வருமா

- கன்னல்

நீ என் நிலவரசி

முகில்களைக் கிழித்து வெண்புரவி பறக்கிறது.
கைக்கெட்டாத் தூரத்தில் என்று காற்று காதில் கிசுகிசுத்தது.
ஆழிக்குமிழிகள் போல் வெளியே தெரியாமல்
உள்ளத்ததில் பெரிய பெரிய..
முகில்களைக் கிழித்தாயிற்று அடுத்தென்ன?
இன்னுமின்னும் அண்டத்தை நோக்கி பயணம் தொடர்கிறது.
தொட்டே தீருவேன் வேட்கை வியாபித்து விரிகிறது.
கட்டித் தழுவி நீயிடும் முத்தத்திற்கான
அவா ஆவியை உசுப்புகிறது.
தீபோல் உன்மேல் நான்கொண்ட காதல்.
என்னை எரித்தெரித்து என் சுயத்தை சாம்பலாக்கி சரசமிடுகிறது.
உருவழிகிறாய் என்று ஓரத்தில் ஒருமனம் விசிக்கிறது.
உணர்ந்தும், உயிர்ப்பு உன்னை மட்டுமே யாசிக்கிறது.
அடி!, என் நெஞ்சக் கூட்டறையில் குடிகொண்ட நிலவரசி
என் மஞ்சச் சாய்கைக்கு நீ மடிதருவதெப்போது?

- வல்லைவ சஹாறா

கனன்றே எரிவாய்...

காலத்தின் உப்பரிகையில் கை கொட்டிச் சிரிக்கிறான் காலன்
இது யாரோ ஒருவரின் கனவுக் கலைப்பல்ல
விடுதலை விரும்பும் விதியின் விரல் பிடித்து
விளையாடும் மொழியாக தினமும் இழப்புக்கள்
அறுவடைக்கு ஆட்களை அசைபோடும் இரைமீட்பில்
ஆண்டவனை அர்ச்சிக்கும் வரம் பெற்ற வள்ளலுக்கும்
வழங்கிய பரிசு மரணம்
குழந்தை இயேசு குடிகொண்ட மண்ணில்
நிரந்தரமாய் நீ விடைபெற்ற செய்தி
அறிந்ததால் அதிர்ந்தோம்
அந்நிய மண்ணில் தடம் பதித்தாலும்
மண்ணின் நினைப்பில் மனம் புதைந்தே கிடக்கும்
மண்ணின் விழுதுகள் நாம்
இறை உணர்வினில் கனல் மணக்கும் எழிலான வெண்மலரே
மானிட வதையினால் மனம் கனக்க உம்மை
கல்லறைக்குள் வைத்தோம் இது காலத்தின் கட்டளை
ஈழ விடுதலையில் இதயங்கள் தோறும்
காலத்து நிதர்சனமாய்
கனன்றே எரிவாய் தீக்கனலாக.

- காவலூர் கண்மணி

DK Electronics உங்கள் அனைத்து தேவைகளுக்கும் உடன் அழையுங்கள்

Repair & Installation – Any Type Any Model

TV- (Plasma, LCD, DVD, Hi-Fi, CCTV)

Digital Video Recorders, Security Devices and others.

Satellite and Ariel Installation.

TV DOCTOR
Service from the heart!

S.Mohan on 07782 331 243
07864 119 919